# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை :– திரு. எம்.கே. மாயக்கிருஷ்ணன், பி.பி.ஏ., பி.எல்.,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
மயிலாடுதுறை.

அ.சா.1 நாள் 31.01.2025

| SC. No. | 157/2024 | | |
|---|---|---|---|
| பெயர் | மகேஷ்குமார் | த/பெ. | சங்கர், சிவசாபம் |
| வயது | 35 | தொழில் | காவலர் |
| கிராமம் | படுகை | தாலுக்கா | திருவிடைமருதூர் |

(1,2 எதிரிகள் ஆஜர்,).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் தற்போது மயிலாடுதுறை ரோந்து காவல் பிரிவில் முதல் நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு மயிலாடுதுறை மதுவிலக்கு அமலாக்க பிரிவில் முதல் நிலை காவலராக பணியாற்றினேன். 02.08.2023 தேதியில் காலை சுமார் 04.00 மணியளவில் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் மேற்பார்வையில் மயிலாடுதுறை மதுவிலக்கு அமல் பிரிவு ஆய்வாளராக பொறுப்பு வகித்த நாகரத்தினம் அவர்களுடன் நானும் முதல் நிலை காவலர் மனோகரன் என்பவரும் செம்பனார்கோவில் பகுதியில் ரோந்து சென்றோம். ஆக்கூர் முக்கூட்டில் காலை 04.00 மணிக்கு வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தோம். அப்போது TN 10 BC 2639 என்ற பதிவெண் கொண்ட டாடா ஜெஸ்ட் என்ற வெள்ளை நிற கார் வந்தது. நாங்கள் மேற்படி வண்டியை மறித்தோம். அவர்கள் நிற்காமல் சென்றார்கள். நாங்கள் அந்த விரட்டிச் சென்று மடக்கி பிடித்தோம். ஆய்வாளர் மேற்படி வாகனத்தை சோதனை செய்தார். டிரைவரை விசாரித்தபோது அவர் அவருடைய பெயர் ராஜேஷ் என்று கூறினார். ஆஜர் 2ம் எதிரி தான் டிரைவராக இருந்தார். மேற்படி வண்டியில் டிக்கியில்

பார்த்தபோது தமிழக அரசால் தடைச்செய்யப்பட்ட மது பாட்டில்கள் இருந்தது. ஒரு கேசுக்கு 48 பாட்டில்கள் வீதம் 11 கேசுகளில் சூப்பர் ஸ்டார்ண்டட் பிராண்டி மது பாட்டில்கள் இருந்தது. 4 கேசுகள் ஜெப்ரசிஸ் பிராண்டி இருந்தது. 4 பாலிதீன் பைகளில் தலா 60 லிட்டர் அளவுள்ள விஷ நெடியுடன் கூடிய சாராயம் இருந்தது. ஆய்வாளர் எதிரி ராஜேசை காது செய்து செய்தார். 04.20 மணிக்கு ஆய்வாளர் வாக்குமூலம் வாங்கினார். எதிரி ஆய்வாளரிடம் மயிலாடுதுறை தூக்கணாங்குளத்தை சேர்ந்த விமல் என்பவரிடம் மேற்படி சாராயப்பொருட்களையும் மேற்படி காரையும் கொடுத்துவிட்டு வந்து விட வேண்டுமென்று சொன்னார் என்று கூறினார். மேற்படி மதுபாட்டில்கள் மற்றும் சாராயத்தை ஆய்வாளர் கைப்பற்றினார். விஷ நெடியுடைய சாராயத்தை அந்த இடத்தில் கொட்டி அழித்தார். அழிப்பு மகசர் தயார் செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் அழிப்பு மகசர் ஆகியவற்றிலுள்ள 2வது சாட்சி கையொப்பங்கள் என்னுடையது தான். ஆய்வாளர் பார்வை மகசர் வரைபடம் தயார் செய்தார். அதில் நானும் மேற்படி மனோகரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். பார்வை மகசரிலுள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகசர் அ.சா.ஆ.1.** பின்னர் கைது செய்த எதிரியையும் மேற்படி தடயப்பொருட்களையும் நிலையம் கொண்டு வந்து ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். அதன்பிறகு 08.01.2024 அன்று மயிலாடுதுறை வண்டிகார தெருவில் வைத்து 1வது எதிரி விமல் என்ற விமல்ராஜை ஆய்வாளர் விசித்ராமேரி என்முன்னிலையிலும் கைது செய்தார். ஆஜர் 1வது எதிரிதான் மேற்படி விமல் என்ற விமல்ராஜ் ஆவார். ஆய்வாளர் 1ம் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார். நானும், சாட்சி முருகவேலும் அங்கு இருந்தோம். சாட்சியாக கையொப்பம் செய்தோம். காட்டப்படும் 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். எதிரியை காவல் நிலையம் அழைத்து வந்து ரிமாண்டுக்கு அனுப்பினார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

CJM, MAYILADUTHURAI.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நாங்கள் ரோந்திற்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் ஆய்வாளர் நாகரத்தினம் அவரது டுவிலரில் வந்தார். நானும், மனோகரும் ஒரு டுவிலரில் சென்றோம். நாங்கள் வாகனதணிக்கை செய்த விபரத்தை வாகன தணிக்கை பதிவேட்டில் எழுதுவது வழக்கம் என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு 4 கி.மீ. தூரத்தில் தமிழ்நாடு அரசின் சோதனை சாவடி உள்ளது என்றால் 15 கி.மீ. தூரத்தில் உள்ளது. காரைக்காலிலிருந்து தமிழ்நாட்டிற்கு வரும் வாகனங்கள் மேற்படி சோதனை சாவடியை கடந்ததுதான் வரவேண்டும் என்றால் இல்லை வேறு வழிகள் உள்ளது. காரைக்காலையும் தமிழ்நாட்டையும் பிரித்து ஒரு ஆறு ஓடுகிறது என்றால் சரிதான். அந்த ஆற்றை கடந்து வருவதற்கு இரண்டு பாலங்களும் இரண்டு சோதனை சாவடிகளும் மட்டுமே உண்டு என்றால் சரியல்ல. நான் எந்த இடத்தில் வைத்து கையொப்பம் போட்டேன் என்றால் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். நான் கையெழுத்துப் போட்ட பேப்பரில் உள்ள விவரங்களை யார் எழுதினார்கள் என்றால் கையால் எழுதவில்லை லேப்டாப்பில் டைப் செய்தார்கள். எங்கு வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றால் காவல் நிலையம் வந்து எடுக்கப்பட்டது. அதன்பிறகு நான் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் எதிரியை கைது செய்த பிறகு காவல் நிலையம் வந்து 08.30 மணிக்கு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும்போது தான் குற்ற எண் கொடுக்கப்படும் என்றால் அதற்கு முந்தைய நம்பர் எங்களுக்கு தெரியும். அவ்வாறு பதிவு செய்ய இயலாது என்றாலும் குற்ற எண் கொடுத்தப்பிறகு தான் வழக்கு பதிவு செய்ய முடியும் என்றாலும் சரியல்ல. நான் கையொப்பம் போட்ட ஆவணங்கள் அனைத்தையும் வழக்கின் போக்கிற்கு ஏற்ப காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து பின்னிட்டு என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து 2ம் எதிரி கைது செய்யப்படவில்லை என்றாலும் அவர் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. அவரிடமிருந்து

தடயப்பொருட்கள் எதுவும் கைப்பற்றபடவில்லை என்றாலும் சரியல்ல. 1ம் எதிரியும் நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யப்படவில்லை என்றாலும் அவர் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. புள்ளி விவரத்திற்காக ஆய்வாளர் பதிவு செய்த பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.